திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் நாள், திங்கள் கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

பொருள். 1

அரசு தனது ஆணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.08.05.1998ல் உதவி செயற்பொறியர் நிலையில் 05 பணியிடங்களும், அதனைத் தொடர்ந்து அரசு தனது ஆணை (நிலை) எண்.74, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.06.2000ல் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு உதவி செயற்பொறியாளர் (மின்சாரம்) நிலையில் இரண்டு பணியிடங்களை நிரந்தரமாக தொடர அனுமதித்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி இம்மாநகராட்சிக்கு உதவி செயற்பொறியாளர் நிலையில் மொத்தம் 07 பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கல் பணி விதிகள் 1996ன் வகுப்பு – II நிலையிலான உதவி செயற்பொறியாளர் பணியிடத்தினை பூர்த்தி செய்து கொள்ள கீழ்கண்ட நியமன முறை மற்றும் தகுதிகள் வரையறை செய்யப்பட்டுள்ளது.

வ. எண்	பணியிடத்தின் பெயர்	பணி விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் நிபந்தனைகள்
1	உதவி செயற்பொறியாளர்	1. உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் நிலைகளில் பணிபுரிந்து வருபவர்களை பதவி உயர்வு செய்து பணியமர்த்துதல். 2. உதவிப்பொறியாளர் அல்லது இளநிலைப் பொறியாளராக மைய அலுவலக பொறியியல் பிரிவில் ஓராண்டுக்கு குறையாமலும், வார்டு அலுவலகங்களில் மூன்றாண்டுகளுக்கு குறையாமலும் பணிபுரிந்திருத்தல் வேண்டும்.

உதவிசெயற்பொறியர் நிலையிலான பணியிடங்கள் பூர்த்தி செய்வதற்கு உதவிப்பொறியர் மற்றும் இளநிலைப்பொறியர் ஆகிய நிலைகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் ஒருங்கிணைப்பு பணிமூப்பின் அடிப்படையில் தகுதி மற்றும் திறன் பெற்றுள்ளவர்களை பதவி உயர்வு மூலம் பணி அமர்த்திட பணி விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாநகராட்சி மைய அலுவலகத்திற்கென பிரத்யேகமாக உதவிப்பொறியாளர் / இளநிலைப்பொறியாளர் நிலையில் பணியிடம் ஏதும் அனுமதிக்கப்படவில்லை. எனவே, மைய அலுவலகத்தில் ஒரு வருடம் பணிபுரியும் கேள்வி எழவில்லை.

இந்நிலையில் உதவி செயற் பொறியாளர் நிலையில் பணிபுரிந்து வந்த திரு.பா.செல்வம் என்பவர் மீது வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்தல் தொடர்பான வழக்கில் இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்புத் துறையினரால் தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளதாலும், இதன் வழக்கில் குற்ற விசாரணை (Sanction of presecution) அரசால் அனுமதி வழங்கப்பட்டு நிலுவையில் உள்ளதாலும், இவரை 31.08.2019ம் தேதி பிற்பகல் முதல் வயது முதிர்வின்

காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்காமல் 30.08.2019 முதல் தற்காலிக பணி நீக்கம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இருப்பினும், வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும் வயதை அவர் கடந்து விட்ட காரணத்தால் மேற்படி பணியிடம் 01.09.2019 முதல் காலியாக உள்ளது. இது தொடர்பாக உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான இறுதி பணி மூப்புப் பெயர் பட்டியல் 19.06.2019ந் தேதிய செயல்முறை வாயிலாக வெளியிடப்பட்டுள்ளது.

உதவிப்பொறியர் / இளநிலைப்பொறியாளர்களின் இறுதி பணி மூப்புப் பெயர் பட்டியலின் படி திரு.பா.மதிவாணன், இளநிலைப் பொறியாளர் உதவி செயற்பொறியாளர் நிலையிலான பணியிடத்திற்கு பரிசீலனை செய்யப்பட வேண்டியவர் ஆவார். இவர் இளநிலைப் பொறியாளர் நிலையில் 01.09.2006 முதல் நாளது தேதி வரை பணிபுரிந்து வருகின்றார். இதன் வாயிலாக பொறியர் பிரிவின் பல்வேறு பணிகளில் கடந்த 12 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து போதிய தேர்ச்சி மற்றும் முன் அனுபவம் பெற்றுள்ளவராக இருந்து வருகின்றார்.

மேலும், இவர் மீது இன்றைய நாளில் மாநகராட்சி ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேல்முறையீடு விதி 8(1)ன் கீழ் குற்றச்சாட்டுகள் நிலுவையில் உள்ளது. பணித் தேர்ச்சி வெளியிடுதல் மற்றும் இது தொடர்பான திருத்தங்களை சார்நிலைப் பணி விதிகளுக்கு திருத்தங்கள் மேற்கொண்டு வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண்.22, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, நாள்.24.02.2014ல் நடப்பில் உள்ள விதி 8(1) ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டு கோப்பு பதவி உயர்வினை பாதிக்காது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது நடப்பில் உள்ள 8(1)ன் கீழ் உள்ள குற்றச்சாட்டு கோப்புகளால் பதவி உயர்வுக்கு எவ்விதத்திலும் பாதிப்பு ஏற்படாது. தவிர, கடந்த 05 ஆண்டுகளில் இவர் தண்டனை ஏதும் பெற்று இருக்கவில்லை.

எனவே, இவரை 01.09.2019 முதல் காலியாக இருந்து வரும் உதவி செயற்பொறியர் நிலையிலானப் பணியிடத்தில் மாமன்றத்தின் ஒப்புதலுடன் பதவி உயர்வு செய்து கொள்ளவும், இதற்கான அரசின் உறுதி ஆக்க ஆணையினை பெற தக்க கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்கவும், உறுதி ஆக்க ஆணை பெறப்பட்ட பின்னர் உதவி செயற்பொறியாளர் நிலையிலானப் பணியிடத்திற்குரிய ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கவும் தனி அலுவலர் அனுமதிக்கு மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மேற்படி திரு.பா.மதிவாணன், இளநிலைப் பொறியாளர் சுமார் 12 வருடங்கள் இளநிலை பொறியாளராக பணிபுரிந்து அதன் மூலம் பொறியர் பிரிவின் பல்வேறு பணிகளிலும் போதிய முன் அனுபவம் பெற்றுள்ளதன் அடிப்படையில், இவரை உதவி செயற்பொறியாளர் ஆக அரசின் உறுதியாக்க ஆணையினை முற்றிலும் எதிர்நோக்கி பதவி உயர்வு செய்து பணியமர்த்திட மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். அரசின் உறுதியாக்க ஆணை பெறப்பட்டவுடன் உதவி செயற்பொறியாளர் நிலையிலான பணியிடத்திற்கு உரிய ஊதியம் விதிகளின் படி நிர்ணயம் செய்து வழங்க தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம்.
2. அரசின் உறுதி ஆக்க ஆணையினை பெற உரிய கருத்துருவினை அரசுக்கு, நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அனுப்பி வைக்கவும் தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம்.

(கோப்பு எண்.சி1/8711/2017/மையம்)
தீர்மானம் எண்.684 (பொருள்–1) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.
பொருள். 2

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்ட பகுதிகளிலுள்ள 19 எண்ணிக்கை மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகங்களில் உள்ள வால்வு தொட்டிகளை சுத்தம் செய்தல் பேக்கிங் கசிவுகளை சரிசெய்தல் குடிநீர் பகிர்மான வால்வுகளை இயக்குதல் மற்றும் சோடியம் ஹைப்போ குளோரைடு பம்பு செட்டு ஆகியவைகளை ஓதைண்டிற்கு இயக்கி பராமரிக்கும் பணியினை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.74.80 இலட்சத்திற்கு தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நாள்.10.10.2019ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதனை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.315/2019–20ன் வாயிலாக 06.11.2019 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி

கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ. எண்	வேலையின் விபரம்	வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்		குறிப்பு
		ஒப்பந்ததாரர் பெயர்	ஒப்பந்த சதவீதம்	
1	2	3	4	5
	பொது நிதி 2019–20			
1	அரியமங்கலம் கோட்டத்திற்கு உட்பட்ட அனைத்து மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளை சுத்தம் செய்து துய்மையாக வைத்திடவும் வால்வுகளில் ஏற்படும் பேக்கிங் கசிவுகளை சரிசெய்து திரும்ப பேக்கிங் போடவும் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் இயக்கி பராமரிக்கும் பணி மதிப்பீடு ரூ.74.80 இலட்சம்	M/s. A.S. Power Solution, திருச்சி	0.10% குறைவு	இணையதளம் மூலமாக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். ஏ.எஸ் பவர் செலுயுசன்** நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.10**% **குறைவாக** ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
		திரு. G.G. சக்திவேல், திருச்சி	0.05% கூடுதல்	

அலுவலகக் குறிப்பு :

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 5ல் குறிப்பிட்டுள்ள காரணங்களை முன்னிட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று தனி அலுவலர் மற்றும் ஆணையர் ஒப்புதல் அளிக்கலாம்.

மதிப்பீட்டில் ESI – 4.00% என குறிப்பிட்டு தற்சமயம் ESI – 3.25% குறைக்கப்பட்டதால், பட்டியல் ESI 3.25% அளவிற்கு குறைக்கப்பட்டு பட்டியல் அளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு ஒப்புதல் அளிக்கப்படலாம்.

இ4/9818/2019(மையம்)
தீர்மானம் எண்.685 (பொருள்–2) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.
பொருள். 3

இம்மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி மெசர்ஸ். ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் (பி) லிமிடெட், சென்னை என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள இவ்வலுவலக உத்திரவு ந.க.எண்:இ5/9652/13(மை) நாள்:3.11.2014 மூலம் உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணியிணை மேற்கொண்டதில் பணி திருப்திகரமாக இல்லாததால் இவ்வலுவலக உத்திரவு ந.க.எண்:இ5/9652/13(மை) நாள்:8.07.2016 -ல் மெசர்ஸ். ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் (பி) லிமிடெட், சென்னை நிறுவனத்தாருக்கு வழங்கிய ஆணையிணை ரத்து செய்யப்பட்டது. இது தொடர்பாக மெசர்ஸ். ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் (பி) லிமிடெட், சென்னை நிறுவனத்தாரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு சென்னை உயர்நீதி மன்ற உத்திரவு நாள்: 22.02.2018 –ல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மேலும் மெசர்ஸ். ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் (பி) லிமிடெட், சென்னை நிறுவனத்தாருடன் மத்தியஸ்தம் (Arbitration) பேசுவதற்காக 24.04.2019 –ந் தேதிய சென்னை

உயர்நீதி மன்ற உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கிற்காக, மாநகராட்சி சார்பாக ஆஜராகி வழக்காடுவதற்கு உரிய வக்காலத்து திரு. P.ஸ்ரீநிவாஸ், சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் அவர்களிடம் 12.06.2019ந் தேதி நேரில் சென்று கொடுக்கப்பட்டது.

இவ்வழக்கிற்காக, மத்தியஸ்தம் (Arbitration) பேசுவதற்கு மாண்புமிகு நீதிபதி திரு.K.வெங்கட்ராமன் (முன்னாள் நீதிபதி) அவர்களை நியமித்து 26.09.2019 –ந் தேதிய சென்னை உயர்நீதிமன்ற உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் மாண்புமிகு நீதிபதி திரு. K.வெங்கட்ராமன் (முன்னாள் நீதிபதி) அவர்களின் 19.10.2019 –ந் தேதிய கடிதத்தில், தன்னை இவ்வழக்கிற்கு ஒரே நடுவராக (sole Arbitrator) நியமித்து இருப்பதாகவும், இவ்வழக்கிற்கான முதல் அமர்வு 01.11.2019 அன்று மதியம் 2.30 மணியளவில் சென்னை உயர்நீதி மன்ற நடுவர் மையத்தில் நடை பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சென்னை உயர்நீதி மன்ற நடுவர் மையத்தில் முதல் அமர்வு 01.11.2019 அன்று மாண்புமிகு நீதிபதி திரு.K.வெங்கட்ராமன் (முன்னாள் நீதிபதி) அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இவ்வழக்கு தொடர்பான கட்டணத்தை பின்னர் தெரிவிப்பதாகவும், முதற்கட்டமாக கட்டணத்தொகை ரூ.2,50,000/-ஐ மூன்று வார காலத்திற்குள் செலுத்துமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேற்கண்ட வழக்கு தொடர்பான விவரங்களை பார்வைக்கும் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற முன்னால் நீதிபதி அவர்களுக்கு மேற்கண்ட வழக்கிற்கான கட்டணமாக தொகை ரூ.2,50,000/- ஐ வழங்கவும் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகப் குறிப்பு:

1. Arbitration வழக்கிற்கான கட்டணத் தொகை ரூ.2,50,000/-ஐ சிறப்பினமாக கருதி வழங்க அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினை 2019–20ம் ஆண்டு வருவாய் நிதி செலவினங்கள் கணக்கு தலைப்பு எண்.2017ல் வழக்குக் கட்டணம் தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.10.00 லட்சத்திலிருந்து செலவினத் தொகை ரூ.2,50,000/-ஐ மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

இ5/9652/2013(மையம்)

தீர்மானம் எண்.686 (பொருள்–3) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 4

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் கோஅபிஷேகபுரம் கோட்டம் பகுதிகளில் உள்ள பெண்கள் கழிப்பிடங்களில் மராமத்து பணி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு இறுதி பட்டியல் வழங்கப்பட்டு, 3 ஆண்டுகள் கடந்து விட்டது. எனவே மேற்படி பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள பட்டியல் தொகை மற்றும் கூடுதல் வைப்புதொகை ஆகியவைகளை திரும்ப வழங்கும் படி திரு.T.செந்தில்நாதன், திருச்சி ஒப்பந்ததாரர் கோரியுள்ளார்.

திரு. T. செந்தில்நாதன், ஒப்பந்ததாரர் செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ.14,139/- இம்மாநகராட்சி நிலுவை வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்க்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்துள்ள காப்புத்தொகை இம்மாநகராட்சி காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் (Lapsed Deposit Account) பத்தி எண் 7ல் கண்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வ எண்	பணியின் விபரம்	ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)	செலுத்திய இடம்	பிடித்தம் செய்யப் பட்டுள்ள தொகை விபரம்	தொகை (ரூபாயில்)	காலங்கடந்த நிலுவை வைப்பத் தொகை (2018–19) பதிவேட்டின் பக்க எண் & வரிசை எண்
1	2	3	4	5	6	7
1	வார்டு எண்.58 டாக்கர் ரோடு மற்றும் காளையப்பன் தெருவில் உள்ள நவீன கழிப்பிடங்களில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் மதிப்பீடு ரூ. 3.00 இலட்சம் இ7/7993/2013 (மையம்)	திரு. T.செந்தில் நாதன்.	இறுதிப் பட்டியலில் பிடித்தம் செய்யப் பட்டுள்ளது	15.07.14 காப்புத் தொகை	14139	பகுதி - VII பக்கம் எண்- 14 வ.எண் - 179 (மைய அலுவலகம்)
மொத்தம்					14139	

மேலும், மேற்கண்ட பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரருக்கு தணிக்கையில் "எவ்வித தணிக்கைத் தடையும் இல்லை" எனச் சான்று அளிக்கப்பட்டுள்ளதால், பத்தி எண் 6ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகைகளை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகைகள் கடந்த 3 வருடங்களுக்கு முன் செலுத்தப்பட்டு காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால், தற்பொழுது காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) அத்தொகையை திரு. T.செந்தில்நாதன், ஒப்பந்ததாரர், திருச்சி அவர்களுக்கு ரூ.14,139 /–யை, திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

இ7/7993/2013 (மையம்)

தீர்மானம் எண்.687 (பொருள்–4) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 5

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம், Lorry Shed-ல் உள்ள விளம்பர வாகனத்தில் பொதுமக்கள் அறிந்து கொள்ள ஏதுவாக மழை நீர் சேகரிப்பு, மக்கும் மற்றும் மக்கா குப்பைகளை தரம் பிரித்து கொடுத்தல், வரி வசூல் தொடர்பானஅறிவிப்புகள், மாநகராட்சியின் சாதனைகள் மற்றும் தமிழக அரசின் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு செய்ய ஏதுவாக மாநகராட்சி வாகனத்தில் LED விளம்பர பலகை கொண்டு இவ்விழிப்புணர்வு ஏற்படுத்த ஆணையர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதன் அடிப்படையில் மாநகராட்சி வாகனத்தில் 8" x 6" அளவுடைய P6 LED Out door Video Display Screen – 1 எண், 7 KVA ஜெனரேட்டர் – 1 எண், ஒலி பெருக்கிகள், ஒலிப்பெட்டி மற்றும் அதற்கு தேவையான இதர உபகரணங்களை சப்ளை செய்து வாகனத்தில் பொருத்தி இயக்கி தரும் பணிக்கு, **M/S.Comtech Systems,** திருச்சி நிறுவனத்தார் மூலம் ரூ.7.90 இலட்சம் செலவினத்தில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 1994, பிரிவு எண்.15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ6/9806/2019/மையம்
தீர்மானம் எண்.688 (பொருள்–5) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) – சு. சிவசுப்ரமணியன்,
தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.